**அனுப்புநர்**

திரு.க.செல்வக் குமார், M.A., B.Ed.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி

**ந.க.எண்.012283/ பி1 / 2022** **நாள் : 24.06.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – ஆகஸ்ட் 2022, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு – பள்ளிகள் மற்றும் சேவை மையங்கள் (Service Centre) மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்க கோருதல் – தொடர்பாக.

*****

நடைபெற்று முடிந்த மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தேர்வர்கள் மற்றும் மே 2022 பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க தவறிய தனித் தேர்வர்களுக்கும் **02.08.2022 முதல் 08 .08.2022 வரை** ஆகஸ்ட் 2022 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு நடைபெறவுள்ளது. அத்தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் ஆன்–லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கு **27 .06.2022 (திங்கட் கிழமை) முதல் 04.07.2022 (திங்கட் கிழமை) வரையும், சிறப்பு அனுமதி திட்டத்தில் விண்ணப்பிக்கும் நாட்கள் (தக்கல்) 05.07.2022 முதல் 07.07.2022 வரையும்,** பள்ளிகள் மற்றும் சேவை மையங்கள் (Service Centre) சென்று பதிவு செய்யுமாறு தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பள்ளிகள் மற்றும் சேவை மையங்களுக்கு (Service Centre) வருகைபுரியும் பள்ளி மாணாக்கர் / தனித்தேர்வர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஆன்–லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **27.06.2022 காலை முதல்** தேர்வர்கள் பயின்ற பள்ளிகள் மற்றும் சேவை மையங்களுக்கு (Service Centre) வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் அவர்கள் மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) மற்றும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழினை (Provisional Certificate) ஆய்வு செய்து www.dge.tn.gov.in என்ற website–ல் பள்ளிகள் மற்றும் சேவை மையங்களுக்கு (Service Centre) ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2. மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க தவறிய தனித் தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centre) வாயிலாக 27.06.2022 முதல் 04.07.2022 வரையும், சிறப்பு அனுமதி திட்டத்தில் (தக்கல்) 05.07.2022 முதல் 07.07.2022 வரையும், **விண்ணப்பிக்க வருகைபுரிவார்கள்.** அவ்வாறு வருகைபுரிவோரிடம் உரிய ஆவணங்களைப் பெற்று சேவை மையங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ கொண்டு ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. பள்ளிகள் மற்றும் சேவை மையங்கள் (Service Centre) விண்ணப்பங்கள் பெற்றிட 07.07.2022 **அன்று கடைசி நாளாக** தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பங்களை பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர் Report Section –ஐ Click செய்து தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் 05.07.2022 மற்றும் 08,07.2022 ஆகிய நாட்களில் பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.

பின்னர் அதனடிப்படையில் தனித்தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை (i) பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விண்ணப்பங்களுக்கான கட்டணம் (SSLC Public Exam Application Amount), **(தக்கல் கட்டணம் உட்பட)** அரசாணை(ப) எண்.780, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.28.12.2017–ன்படி, (ii) பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான ஆன்–லைன் கட்டணமாக தொகை (SSLC On–line Fees) என 2 வகைககளாக தனித்தனியாக பிரித்து, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| விவரம் | வகுப்பு | விண்ணப்பம் மற்றும் கட்டண இரசீது ஒப்படைக்கும் நாள் |
|---|---|---|
| விண்ணப்பங்கள் மற்றும் கட்டண இரசீது (27 .06.2022 முதல் 04.07.2022 வரையிலான விண்ணப்பங்கள்) | பத்தாம் வகுப்பு | 08.07.2022 |
| **சிறப்பு அனுமதி கட்டணம் (தக்கல்) ( 05.07.2022 முதல் 07.07.2022 வரையிலான விண்ணப்பங்கள்)** | | |

மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டண தொகை மற்றும் ஆன்–லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினை **மேற்காண் தேதிகளில்** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், ஆன்–லைனில் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கான அறிவுரைகள் பத்தாம் வகுப்பு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றியே தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும்பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்களையும் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கைபேசி எண்: 9498383075/9498383081**

**இணைப்பு :**

1. பள்ளிகள்/ சேவை மையங்களுக்கான அறிவுரைகள்
2. தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்
3. பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (பணியாளர்),**

**நகல்**

1. அனைத்து பள்ளிகள் / தேர்வு மைய தலைமையாசிரியர்கள்
   –முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக (தக்க நடவடிக்கைக்காக)
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
   – தக்க நடவடிக்கைக்காக